**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.834/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 1 |
| Name | : | ரமேஷ், வயது 46 |
| Father Name/Husband Name | : | ராமராஜ் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தலைமை காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of June 2026.

**Accused present.**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது கோவில்பட்டி மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.09.2025 ஆம் தேதி கோவில்பட்டி மதுவிலக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது காலை 07.00 மணியளவில் நான், பெண் தலைமை காவலர் 2133 சுமித்ரா மற்றும் முதல் நிலை காவலர் 1022 பால்ராஜ் ஆகியோர் சகிதம் ஆய்வாளர் உத்தரவின்படி ரோந்து செய்து கண்காணித்து வந்த போது மேற்படி பெண் தலைமை காவருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி கோவில்பட்டி, நடராஜபுரம், ராக்காச்சியம்மன் கோவில் தெருவில் சந்தேகத்துடன் பிளாஸ்டிக் சாக்கு பையுடன் நின்றுகொண்டிருந்த நபர் எங்களை கண்டதும் ஓட முயற்சித்த நபர் பின்னர் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்து கோவில்பட்டி, இனாம்மணியாச்சி, இந்திரநகரைச் சேர்ந்த, வேலுசாமி என்பவரின் மகன் காந்திராஜ், வயது 51 என்பவர் கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் சாக்கு பையை சோதனை செய்து பார்த்தபோது சுமார் 180 ML அளவு கொண்ட Seamen's paradie classic Brandy பாட்டில்கள் 30 எண்ணம் வைத்திருந்தார்.

2 மேற்படி நபரை விசாரித்தபோது டாஸ்மாக் கடையிலிருந்து பிராந்தி பாட்டிலை வாங்கி அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருந்ததாக கூறினார். மேற்படி நபர் சட்ட விரோதமாக மதுபாட்டில்களை விற்க வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி சொத்துக்களை அத்தாட்சி

பிறப்பித்து கைப்பற்றி, அந்த அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் போலீசார் பார்டியாகிய நாங்களே கையொப்பம் செய்தோம். மேற்படி சொத்து சகிதம் எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து அன்றைய தினம் காலை 09.00 மணியளவில் நிலைய குற்ற எண். 89/2025 U/s 4(1)(C) TNP Act ஆக வழக்கு பதிவு செய்ய மேற்படி பெண் தலைமை காவலருக்கு உதவியாக இருந்தேன். அந்த அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

3 பொதுவாக காலை 07.00 மணிக்கு மதுவிலக்கு ரோந்திற்கு செல்வீர்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு காவலர்களுக்கும் தனிதனியாக ரோந்துக்கு பகுதிகள் ஒதுக்கப்படும் என்றால் சரியல்ல, அது காவலர்களின் எண்ணிக்கை பொறுத்தது. அத்தாட்சியில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபட்ட நேரம் காலை 07.30 என்று எழுதப்பட்டு பின்பு காலை 08.30 என்று திருத்தப்பட்டது என்றால் சரிதான், அது அடித்தல் பிழை, முதல் தகவல் அறிக்கையில் காலை 08.30 என்று குறிப்பிடபட்டுள்ளது. பொதுவாக ரோந்து சென்ற விவரங்களுக்கு அறிக்கையாக குறிப்பிட்டு உதவி ஆய்வாளரின் பொறுப்பில் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். இந்த வழக்கின் நாங்கள் ரோந்து சென்றதற்கு நான் அறிக்கை கொடுத்தேன் என்றால் வாய்மொழியாக கொடுத்தேன்.

4 காவலர் சுமித்ரா ரோந்து சென்றதற்கு எழுத்துபூர்வமாக அறிக்கை கொடுத்தாரா என்றால் வாய்மொழியாக கொடுத்தார், எழுத்துபூர்வமாக கொடுக்கவில்லை. வாய்மொழியாக அறிக்கை கொடுத்த விவரம் வழக்கு கோப்பில் துலங்குமா என்றால் துலங்காது. நாங்கள் ரோந்துக்கு சென்ற சமயத்தில் சம்பவ இடத்தில் 5,6 தனிநபர்கள் இருந்திருப்பார்களா என்றால் இல்லை. நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றபோது எதிரி மது விற்று கொண்டிருந்ததாக அத்தாட்சியில் துலங்காது என்றால் சரிதான், ஆனால் ரகசிய தகவல் கிடைத்தது, எதிரி மது விற்றுக் கொண்டிருந்தார். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றபோது மதுபாட்டில்கள் வாங்கிய நபர்கள் இல்லை என்றால் சரிதான்.

5 நான் உண்மையில் சம்பவ இடத்தில் வைத்து எந்தவித வழக்குச் சொத்துக்களும் கைப்பற்றவில்லை என்பதால்தான் அத்தாட்சியில் கைப்பற்றிய நேரம் முரண்பாடுகளுடன் உள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றாலும், எதிரியிடம் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை என்றாலும், புள்ளி விவர

கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யபட்டது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.